

நெ. 5.

இ ௯௫. Brahmavidya Patrika. நெ. 5.

ப்ரம்மவித்தியா பத்திரிகை

மாதம் ஒருமுறை பிரசுரிக்கப்படும்

[illegible] । [illegible] ॥

புத் ௧௫] நடுக்கவேரி—பிலவஹூ அற்பிசிமீ க்காக மாசிமாதம் இலக்கம [5

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

𑌪𑍍𑌲𑌵 𑌨𑌾𑌮 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌃- 𑌧𑌨𑍁𑌰𑍍𑌮𑌾𑌸𑌃

உ

[illegible] ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌶𑌙𑍍𑌕𑌰𑌗𑍁𑌰𑍁𑌰𑌾𑌜𑍋 𑌵𑌿𑌜𑌯𑌤𑍇। [illegible]

பிரம்மவித்தியா

பிலவ ஹூமார்கழி மீ

உ

சுபமஸ்து.

ஸ்ரீமத் பகவத்பாதர்களான சங்கரகுருராஜர் விளங்குகிறார்கள்.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி உசிதமான அநேகபிருதுக்களுடன் கூடியவர்களாயும் ஸ்ரீமான் ஸ்ரீ சங்கரகுருயோகிசிரேஷ்டர்களது சம்பிரதாயத்தைப் பரிபாலிப்பவர்களாயும், மகா பரிசுத்தர்களாயுமுள்ள மடாதிபர்களின் பொருட்டு நடுக்காவேரி எனனும் கிராமத்தில் வசிப்பவராயும், ஸம்ஸ்கிருதம, தமிழ், தெலுங்கு முதலிய ப்ரம்மவிததியா 'பத்திரிகைகளுக்கு அதிபராயும, ஸ்ரீ காலடி பகவத்பாத கைங்கிரிய தர்ம சபையினது அக்கிராசனாதிபதியுமான ஸ்ரீ சிவாசுவாமிஸ்திரி அநேக நமஸ்காரத்துடன் தெரியப்படுத்துவதாவது.

[illegible]

[illegible]

கோள் தேசமென்னும் மலையாள தேசத்தில் ஸ்ரீமத் அத்வைத வித்யையினது பரமாசாரியர்களாயும் சந்திர சூடரான பரமசிவனது கலாவதார பூதர்களாயும், சமஸ்தமான பாஷண்டர்கள் மதத்தைத் துலைக்கிறதும், மிக்கக் கெம்பீரமுமான வாக் விலாசத்தோடு கூடியவர்களாயும், ஆசாரியர்களுக்கு ஆசாரியர்களாயும், ஆத்மாராமகர்ளது குலபதிகளாயும், ஸ்வரூப சாட்சாத்காரம் செய்பவர்களது புண்ணிய பலத்திற் கிருப்பிடங்களாயும், தன்னை ஆசிரயித்த பக்தர்களது சம்சாரத்தை வேருடன் களைபவர்களாயும் நமது சித்தாந்தங்களுக்கு முதல் ஆசாரியர்களாயும், உங்களது பரிசுத்தமான பெரியதோர் சம்பிரதாயங்களை நிலை நாட்டியவர்களாயும், ஸ்ரீமத் சங்கரர் என்ற நாமத்தால் இப் பூவுலகைப் பரிசுத்தம் செய்யவர்களாயும்,ஜகத்குருவுமான மகான்களது அவதாரத்தால் பூஜிக்கத்தக் தாயும், ஸ்ரீ விருஷாத்திரிநாதருடைய சன்னிதியோடு கூடிய ஸ்ரீ சிவபுரம் (திருசூர்) என்னும்ஊருக்குச்சமீபமாயுமுள்ளகாலடீஎன்னும் மிக்கசிரேஷ்டமான க்ஷேத்திர மொன்று விளங்குகின்றதல்லவா?

அந்த க்ஷேத்திரத்திற்கு இப்போது ஏற்பட்டிருக்கும் துர் தசையானது சமஸ்த வைதிக சஜ்ஜனங்களுக்கும் பெருத்ததோர் துக்கத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. அதை காளடவில் விலக்குவதற்காகப் பிரவர்த்தித்தவராயும், ஸ்ரீ காலடீ பகவத்பாதகைங்கிரிய தர்ம சபையினது மெம்பர்களது உத்ஸாஹத்தால் உண்டான ஆதரவை யடைந்தவராயும், அச்சபையை அனுகிரக்கின்ற ஸ்ரீமத் பரமஹம்ஸேத்தியாதி சமஸ்த பிருதுகளுமடைந்த ஸ்ரீ ஸ்ரீங்கேரி ஜகத்குரு மஹாசுவாமிகளது தயவுக்குப் பாத்திரமுமான என்னால் மூன்று வருஷங்களாக ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் அதே க்ஷேத்திரத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. அம்மகான்களான பரமாசாரியர்களும் வைசாக சுத்த பஞ்சமியில் அவதரித்ததாய் நிச்சயமேற்படுதலால் அதையே ஆதாரமாய்க் கொண்டியாமும் அதே திதியில் உத்ஸவத்தை நடத்தி வருகின்றனம். இவ்வுத்ஸவத்திலிப்போது நடக்கும் ஏற்பாடாவது:—அமாவாசை தினம் அந்த க்ஷேத்திரத்தில் நான்குவருணத்தவர்களும் நான்கு ஆசிரமத்தை நடத்திவரும் வைதிகர்களும் கூடுகிறார்கள். அது முதல் பஞ்சமி தினம் வரை ஆறுதினங்களில் பிராமண போஜனம், ஸ்ரீ ருத்திராத்தியாய பாராயணம், மகன்யாஸ பாராணயம் இவைகளுடன் ஸ்ரீ காலடீ வித்யேசுவர

[illegible]

ரென்ற பரமசிவ லிங்க மூர்த்திக்கு அபிஷேகம், பிறகு ஸ்ரீ மதாசாரியர்களது திருஹஸ்தத்தில் குரு பஜனம் தீர்த்தப்பிரசாதம் அளிக்கிறது மற்றும் பிரஸ்தானத்திரயம் பாராயணம் செய்கின்றது. முதலியன இப்போது நடந்து வருகின்றது. இனி நடக்க வேண்டிய தென்னவெனில்— ஸ்ரீ மதாசாரியர்களால் செய்யப்பட்ட நற் சித்தாந்தங்களை நன்கு கற்றுணர்ந்த மகான்களான பண்டிதர்களைத் தருவிக்க வேண்டும். அவர்களை அழைத்து அத்வைத வித்யா ரகஸியார்த்த விசாரம் செய்யச் சொல்கிறது. ஸ்ரீமத் பகவத்பாத திவ்ய மூர்த்தியினது மகோற்சவம் நடத்துவது, சுவேதாசுவதரம், நரசிம்மதாபநீயம் முதலிய உபநிடத பாராயணம், சங்கர விஜய பாராயணம், சூதசம்ஹிதை புராணம், பகவத்கீதா பாராயணம் ஆகிய இவைகளை ஏற்படுத்த வேண்டும். மற்றும் பிரதிதினமும் பண்டிதர்களால் காலத்துக்குத் தக்கபடி உபன்யாசங்களும் நமது மதத்தை மேன்மைக்கு முன்போற் கொண்டு வரவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றிய ஆலோசனையும் மற்றும் பரிசுத்தர்களான தங்களுடையவும், சபையினது மெம்பருடையவும் ஆக்ஞைப்படி இச் சித்தத்தை நடத்துகிறது. அநேக திரவியங்களாலும், சரீர சிரமத்தாலும் முடிக்கக் கூடிய பெரியதான ஸ்ரீ மதாசாரியர்களுடைய சரணபக்தி விஷயமான காரியத்தில் பரிசுத்தர்களான தாங்கள் தங்கள் மேலான காரியங்களை ஒப்புக்கொள்ளவேண்டும். அதற்காக அனுக்கிரகிக்க வேண்டியதாவது:—பிரதி வருஷத்திலும ஸ்ரீ மடத்தின் பிரதிநிதியில் ஒருவர் அல்லது சிலபேர்கள் உற்ஸவத்திற்கு வரவேண்டும். அதில் நடக்கும் விசேஷமான சிலவை ஒவ்வொரு மடத்தவர்களும் ஒவ்வொரு தினத்திற்காவது, ஒரு பகலுக்காவது, இராத்திரிக்காவது உசிதம் போல் தனதாய் ஏற்றுக்கொண்டு நடத்தவேண்டும். கடைசியில் மொத்தமாய் நடந்திருக்கும் சிலவை சமுதாயமாய் முடிக்க வேண்டும். பண்டிதர்களுக்கும் ஜப ப்பிராமணர்களுக்கும சம்மான மளிக்க வேண்டும். இந்தக் காலடீ பகவத்பாத கைங்கரிய தர்ம சபையை பரிசுத்தர்கள் அனுக்கிரகித்து விருத்தி செய்யவேண்டும். இவ்விதம சிஷ்யர்களும், மடத்தின் காரியதரிசிகளும சேர்ந்த பிறகு ஆலயப் பிரதிஷ்டா விஷயத்தில் ஆலோசனை செய்யவேண்டும். இதனது விவரம் அதிகமறிய வேண்டுமானல் அனுக்கிரக ஸ்ரீமுகமொன்று எனக்காவது அல்லது அச் சபையினது காரியதரிசி

[illegible]

VIA SHORNORE. M R.

[illegible]

[illegible]

தாவது அடியிற்கண்ட விலாசப்படி அனுப்பவேண்டியது. அவ்வுற்சவ சமயத்திற்கு மடத்து மனிதர்களை அனுப்ப சௌகரியப்படாவிடில் அவ்விடத்திய அனுக்கிரகபூர்வமாய் அனுப்பப்படுகிற திரவியத்தை அடியிற்கண்ட விலாசப்படி சபையினது காரியதரிசிக்கனுப்பி எங்களை அனுக்கிரகிக்க வேண்டும். வருடந்தோறும சன்னிதிக்கு மகோஸத்வானுக்கிரமணி அனுப்பி வருகின்றோம். அப்படியே ஆசாரியர்களது சரணபக்திவிருத்தியுடன் எங்களையும் அனுக்கிரகிக்கவேண்டுமென சன்னிதியின் சரணகமலத்தில் அநேகசாஷ்டாங்கநமஸ்காரததுடன்விநயமாய்த் தெரிந்துக்கொள்கின்றேன்,

ம—ா—ா—ஸ்ரீ. தர்மராஜ ஐய்யாவர்கள்.

ஸ்ரீகாலடீபகவத் பாதகைங்கரிய

தர்மசபா பஙூர்.

VIA SHORNORE M R.

ஸ்ரீகாலடீபகவத்பாதகைங்கரிய

தர்மசபாக்கிரசனதிபதிகள்.

கு. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள், ப்ரம்மவித்தியாபத்திராதிபர்.

நடுக்காவேரி. (தஞ்சை.)

வித்வத்வனோதம்.

சகுண நிற்குண சமவாதம்.

(முன் தொடர்ச்சி.)

மற்—பண்டித! அவ்விதமொருபிரயோகம்காட்டுக.

ஒரு—ஒன்றுகாட்டிடில் போதியதா, பல்லாயிரம் காட்டவேண்டுமா?

மற்—ஆபூர்வாயும் முன்னோர்களால் கேட்கப்படாததாயுமுள்ளவிஷயத்தை வினவுகிறேன்.

ஒரு—பாருமின்! எல்லாசப்தங்களும் தன்பொருளை மேன்மையாகவே கூறுகின்றன. ஸ்வவயமான தன்பொருளை விளக்குவதுடன் பகைச்சொல்லையும் தடுக்குகின்றது. எங்ஙனமெனில் "குணமுள்ள ஒருபுத்ரனேபோதுமானது; குணமில்லாத அநேகம் புத்திரர்களால் யாதும்பயனில்லை" என்றற்றொடக்கத்தியகுணசப்தமானது இரண்டிடத்திலும் நற்சொல்லையே விளக்குகின்றது. விகுணத்தின் குணமானது தோஷாகரஹிதமானது. விகுணம், குணம் என்றவிடத்துள்ள குணபதமானது நற்குணத்தையே குறிக்கது. 'ஸ்திரீகட்கு பதியானவன் குணமுடையவனாயினும் இல்லாதவனாயினும் அவனேகதி, குணவானைத்தள்ளி அங்ஙனமிலலாதவனை எவன் ஸேவிக்கிறானோ, சந்திரன் விஷம் இவைகளை பரமசிவன்போல் எவன் தரிக்கின்றானோ; குணதோஷங்களுடைய சொற்றொன் எப்படிப்பிறக்கும்' என்றற்றொடக்கதனவான குணசப்தமானது நற்குணத்தையே நன்குகாட்டுகின்றதேயன்றி நிற்குணபதம் எவ்விடத்தும், கெட்டகுணமில்லாத நற்குணத்தையெ சிலவிடத்துத்தழுவுகின்றது. ஆனால் அந்தசப்தத்தைமட்டிலுமே சுட்டுகிறதில்லை. (வரும்)

[illegible]

[illegible]

எனபது அளவிலடங்கிய பௌதிகப் பொருளாகவே, அதைக் கடந்தது என்றது அளவைக் கடந்த பொருளினியல்பா ம் அவன் பரமாகாயத்தில் மூர்த்தியில்லாதவன் என்றவேத வாக்கியத்தால் அல்லது வ்யோமரூபனும் அதீதனும் எனப் பொருள்கொண்டால் அப்பொழுது பிரம்மராகாச, தகராகாசரூபனும் அளவைக் கடந்தவனும் என்பது பொருளாகமுா டியும். அல்லது வ்யோமாதீதம் என்பதற்கு வ்யோமமென்ற ஆகாயம் போல அதீதன் வியாபகன் எனப் பொருள் சொள்ளின், ஆகாயம்போல் எங்கும் நிறைந்தவன் என்பதாதி வேதவாக்கியங்களை அனுசரித்ததாகும். ஆதலாற்றான் அதை நிரஞ்சனம் என்றது. நிரஞ்சனம்=எக்குற்ற சம்பந்தமும் அற்றது இவ்விசேடத்ணதுக்குப் பூர்வ விசேடணம் ஏ துவமாம். ஆகாயம்போன்றவனிடம் எக்குற்றமும் அணுகாதென்பது கருத்து. ஆதலால் ஆகாயத்தல்யன் எங்கும் நி றைந்தவனுவான் அவன விகாரம்பெறுன் குற்றமுறுன் என்பதாதி வெகு விசேடணங்கள் ஈசனிடமமைக்க ப்பட்டன. (ஐ)

மேற்கண்ட செய்புளடங்கிய பொருட்களை பசிடன் கன்கறியுமாறு விரித்துபதேசிக்கின்றார்.

பொ—ள். 'ஊக்கத்துக்கெட்டாதது, ஒப்பற்றது, குணமற்றது, உபாதியற்றது, நித்யானந்தரூபம் சாந்தம், விகற்பமற்றது, குற்றமுமற்றது.'

வி—ரை. ஊக்கதுக்கெட்டாதது என்றது எதனிடம் வாக்கும்மனதுடன் சொல்லாது திரும்பும் இவ்வாத் மாவைப் பிரவசனத்தாலறிதல் கூடாது. மேதையால் கூடாது அநேகப்படிப்பாலும் கூடாது. என்பதாதி வேதவாக்கு யார்த்தத்தைத் தழுவி என்க. அல்லது ஊக்கத்துக்கெட்டாது இத்தன்மைத்து எனக்குறித்தோத முடியாதது எனப் பொருளகொள்ளலாம், அங்ஙனமாயின் இனி ஆணையில்லை, இல்லையென்று என்பதாதி வேதார்த்தம் தழுவப்பட் டதாம். ஆதலாற்றான் ஸ்முருதியும் ஊக்கத்தடங்காது என்றது ஒப்பற்றது. அதற் கொப்புமில்லை உயர்வுமில்லை யென் றவேதவாக்கியத்தால் என்க. அது சம்பவிக்கக் கூடியதை யாம் உதாசினப்படுத்திலேனுமில்லை. ஸணகுத்துக்குச் சம்ப வித்தாலும் சம்பவிக்கும், நிற்குணத்துக் கெக்காலும் முக்காலுங் கூடாது. எனக்கட்டியருளுகின்றார். நிற்குணம், என்பதனுல் அவன் நிற்குணனுனுல் சத்யகாமத்துவம்முதலிய குணங்களுமகனனமேயோ எனவாசங்கைநிகழ அவைகளும் உபாதிசத்தயை யாவாவுமியல்பினவாகவே அங்ஙனமே யெனக்குறிக்கின்றார். நிருபாதிகம் என்பதால் ஆயின் அந்நிய ற்றான் யாது? கேவலசத்தமாத்திரமாயின், அது தச்சமா அல்லாவா எனச் சீடன் ஐயமுறுவண்ணம் நித்தியான ந்தமயம் யென்று சொருபம் கூறுகின்றார். நித்தியமும்ஆனந்தரூபனுமானஜீவரூபனுமாய் எஞ்ஞான்று மெவ்வாறும் அ கம் என்று அறியப்படுவான் ஆதலாற்றான் சாந்தன் சோதித்தவனுக்குப் சாந்தப்பிரகிருதியாயது. விகற்பமற்றது =சங்கற்பாதிகளைக் கடந்த வஸ்து, குற்றமற்றது=தியாமாதிதுற்குண சம்பந்தமற்றது. அது துயரமில்லாதது என்

[illegible]

றத குற்றமற்றது யென்பதனுலும் மனமில்லாசது யென்றது விகற்பமற்றது பென்றதனுலும் சுத்தம் என்றது சாந்தம யென்றதனுலும் விரிக்கப்பட்டது. ஜீவருபனுல் அந்தக்கரண்தர்மங்களான சங்கற்பவிகற்பாதத் துவெஷாதிகளும் நான் சுகி நான் பிணியாளன் என்பதாதி சரீரதர்மங்களும் அவனிடம் தோன்றுமே யெனத் —தன்லை கிழாவண்ணம் உண்மையில் அவ்வத்த சிற்குணம் நிருபாதிகம், சாந்தன் என்று குறிக்கப்பட்டது. மேற்கண்டவை அசோதகன்நோக்கத்திலே யன்றிச்சோதகனுக் மங்ஙனமில்லை என்றது கருத்து. ௫

இங்ஙனம் சுவானுபவப் பிரமாணபலலப்யமான சொரூபலக்ஷணத்தைக் குறித்துப்பின்னர் தடஸ்தலட்சணத்தைக் குறிக்கின்ருர்.

பொ—ள்- 'இப்பூதப் புவனங்கள் எதனிடம்தோன்றும்? தோன்றினவை எதனுல் பிழைக்கும்? ஓ விப்பிர! எதனிடம் லயிக்கும். எ—து

வி—ரை- எதனிடம்=எந்த முதற்காரணத்திடம், இப்பூதங்கள்=காரணபூதங்கள், புவனங்கள்=காரியபௌதிகங்கள், இவை தோன்றும்=பிரகாசிக்கும். இதனுல் சிருஷ்டியெனப்படும்சொருபசத்தைச் சொல்லப்பட்டது. எதனுல் மேற்கண்ட சொருபஸத்தையைக் கொடுக்கும். எப்பொருளால் பிழைக்கின்றன. விருபபத்தினிடமாய்இருக்கின்றன? எதனிடம் லயிக்கும்=மண் முதலிய காரணங்களில் குட முதலிய காரியங்களைப்போலவும் கயிற்றில் அரவுபோலவும் ஒடுக்கும்? (௬)

பொ—ள்-—அதே ப்ரம்மம் என்று சொல் அதனை வேதாந்தங்களால் அறியவிரும்பு. எ—து

வி—ரை. 'அறியவிரும்பு' என்றதனுல்ஆன்மாவன்றே அடியாள்காணப்படவேண்டும், கேட்கவேண்டும், சிந்திக்கவேண்டும், தெளியவேண்டும் என்றவேதாந்தாவசனத்தால் ஆத்மதரிசனம் விதிக்கப்பட்டமையின், அதற்காக விசாரம் எனப்படும் சிரவணம் செய் என்று சீடனுக்காணை தக்கதாயிற்று.

இனி எவ்விதப் பிரமாணங்களைக்கொண்டு அப்பொருளை யறிவேனெனில் கூறுகின்ருர் வேதாந்தங்களால் என்று இனி வேதாந்தங்களால் அறியப்படவேண்டிய வஸ்துவை இப்புராணத்தால் அறிவது நியாயமோவெனில், இது வேத

[illegible]

ந்த சூத்திரங்களைப்போலவே பரம்மவிசார சாஸ்திரயாகலானும் வேதாந்தப் பொருள் தெளியும் உபநிருக்கணமாதலா
லும் எல்லாவற்றிற்குபயோகமாகையாலும் நான்கு வருணங்களையு மதிகாரியாகப் பெற்றமையானும் இதுவும் பயனுள்ள
தேயாகையாலு மிதையும் ஆதரிக்கவேண்டியதே இங்ஙனமாயின் வைதிகர்க்குப் புராணப் பிராதான்யம் கூடாதென்
ஆசிரியர் ஸ்ரீ பரமஹம்ஸ ராமானந்தர் மறுத்தது யாதுபற்றி எனில்' வைதிகர்க்கென்று அவர் ஓர் அதிகாரியைக் குறி
த்தமையால் அவர்களுக்கு வேதங்களே பிரதானம், மற்றவை யங்ஙனமாகா- புராணம் அங்கமேயன்றி அங்கியல்ல.
ஆதலாற்றான் ஸ்ரீமதாசாரியர்கள் வேதார்த்த நிர்ணயத்தில் புராணம் அங்கம் என்றருளிச் செய்தனர். பூர்ணாதிகாரம்
பெறுதவர்க்குப் புராணமே பிரதானம். வேதாந்தங்களில் சமதமாதிகள் இல்லாதார்க் கதிகாரம் குறையும்- அவ்வுத்
தமாதிகாரம் பெறுதவரும் இப்புராணங்களால் உண்மையறியலாம்-மேல்பூரணாதிகாரிகளுக்கு வேதாந்த விசாரத்திற்கு
அங்கமாகும்;என்பதிற்றடை யாதுமில்லை. இதனால் எதனிடம் இப்பூதங்கள் தோன்றுகின்றன? எதனால் தோன்றி
னவாழ்கின்றன எதனிடம் ஒடுங்கிலயிக்கின்றன அதையறிய விரும்பு அதுவே பிரம்மம் என்றும், இதற்கு முன்
னர் தொடக்கத்தில் எவனிருந்தான் எவனிடம் உலகத்தைக் காப்பான் உற்பவித்தான் இவ்வுலகம் ஒழிவில் எவனிடம்
ஒடுக்கும் என்றும் எழுந்த பலசுருதிகள் ஈசனிடம் தடஸ்தலக்ஷணத்தைச் சேர்ப்பன பொருட்படுத்தப்பட்டன; இ
ங்கு கேட்பவர்பிராம்மணர் ஆதலால் அவரை நோக்கி வேதாந்தங்களால் என்றது. வேதமறியாதவன்— அம்மகானை
யறியான்—அவனை யறியாதவன் ஆரணத்தால் செய்வதென்ன அவ்விவன்றன்னை யந்தணர் அறிய விரும்புவர். வேத
த்தால், வேள்வியால், தானத்தால், விருதத்தால்' என்பதாதி வேதங்களாலும் 'அவனை வேதவாக்கியங்களால் அறிய
வேண்டும்' என்பதாகிஸ்மிருதிகளாலும் அந்தணர் வேதத்தின் வழியறிய வேண்டியபொருளை அதைவிரித்துரைக்கும்
புராணத்தைப் படித்து அதனால் வேதத்தின் பொருள் தெளிய அதன் வழியே யறிவது குற்றமன்றென்பது கருத்து.
வேதங்களாலறியவேண்டும். என்றதால் வேதத்தாலும் அவை வழி நூலானுமன்றி அவைதிகர்சமாதிகளா லறிதல்
கூடாதென்பதாயிற்று- இனி அது ஆனந்தரூபமும் உலககாரணமும் ஆனால் அது தன் காரியத்திற்றானே புகுந்ததோ
வெனக் கூறுகின்றார்.

பொ—ள். அப்பிரமமே உலகைப்படைத்து ஜீவ ரூபமாகியதையடைந்து

[illegible] ॥ ௬ ॥

வி—ரை. அப்பிரமம் என்றது முற்கூறிய விலக்கணத்தை யதனிடம் சேர்த்தது உலகத்து என்றவிடம் உலகம் என்றது பூதபௌதிகங்கள் மேனின்றது. நாம ரூபங்களை விரிப்பேன், அதைப் படைத்ததனுள்ளே புகுந்தது; அத னுட்சென்று சத்து அசத்து இருவகையாயிற்று. அவன் உள்ளத்துள்ளும் பிரவேசித்தான், ஓரேஹஞ்சம் இப்புவனத் தின் நடுவில் என்பதாதி சுருதிகளின் கருத்து இதிலடங்கியது.

மேல் 'அதனுட்சென்று' சத்துமாய் மற்றதுமாய் ஆதாரமாய் ஆதாரமற்றதுமாய் வித்தையுமாய் அவித்தை யுமாய் ஸத்யமும் மற்றதுமாய் ஸத்யமேயாயது என்ற சுருதியைப் பதமுறையாய் விளக்குகின்றார், ப்ரம்மமே ஜீவன் என்பதைக் காட்டுகின்றார்.

பொ—ள். சத்தும், அசத்தும், நிர்வசநீயமும், அனிர்வசநீயமும், ஆதாரமும், நிராதாரமும், விஞ் ஞானமும், அவிஞ்ஞானமும், ஸத்யமும் மற்றதும் ஓ பிராம்மணா! சக்தியால் அதுவேயாயிற்று. அதிகம் சொல்வதிற் பயன் யாது. எ—று

வி—ரை. ஸத் என்பது முன் விரிக்கப்பட்டிது. வேதத்தில் 'மற்றது' என்று உள்ளது அசத்தும் என்று விவ ரணம் செய்யப்பட்டது. இனி ஒன்றுடன் மாறனும தன்மைகள் ஒரிடமமைக்த எப்படியெனில் அதற்கு ஏது சக் தியென்றார். ஈண்டு சக்தி என்றது அவர்வசனீயகிமைபொருந்தியமாயையே. இயல்பில்நிர்விகாரத்தமும்சேர்க்கையில் விகாரமும் என்று விரோதபரிகாரம் செய்யவும், அதில் சூக்கும விசாரம் செய்தால் சத்து என்ற அம்சம், பிரமம்; மற் றது தோற்றம்—மாயாமயமாம், இனி மாயை அனிர்வசனியமும் ஆன்மா பொருள் நிர்வசனியமுமானால் அம்மாயை யை யுபாதியாய்ப் பெற்ற ஈசுவரன் வேறோவெனில் கூறுகின்றார்—நிர்வசனியம் என்பதாதியால், இங்கு நிர்வசனியம் என்றது—'இதுநிங்கால் சொல்லப்பட்டது' என்ற வேதத்தால் துணிந்தோதப் பெற்றது. 'அனிர்வசனியம்' என்றது உலகப் பொருள் மேனின்றது. ஆயின் இம்மாயாமயப்ரஞ்சம் அதிஷ்டான சூன்யமோவெனில் அற்றன்று. ஆதாரமு ம் அதுவே. ஆதாரம் என்றதும் அதிஷ்டானமென்பதும் ஒக்கும். அரவத்திற்குகயிறும் நீரில் கானலும்போல் உலகத் துக்கதிஷ்டானம் ப்ரம்பொருள் என்பது கருத்து. நிராதாரம் உலகவஸ்து தோற்றல் மாத்திரமாதலால் அதிஷ்டானமே சத்யமாகவேண்டும். மற்றது அங்ஙனமாகாதேயெனில், உமக்கு வந்தகெடுதியாது? அங்ஙனமே என்கிறார். 'சத்யமும் என்பதாதியால் அதனுருன் ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள்; 'மெய்யையும் பொய்யையும் கலந்தது' என்றுபாடியத்தில் வழங்கினர். இனிச் சத்தும் நிர்வசனியமும் அதிஷ்டானமும் சத்யமும் பிரமமும் அதுவே; மற்றது அங்ஙனமில்லாவி டில் 'அனிர்வசனியமும் ஆதாரமுமான வஸ்துவின் அபயப்பிரதிஷ்டை அடைவான்' என்றது எங்ஙனமெனில், நோ க்குவானை நோக்கி நோக்கப்படும் பொருளின்வேறுபடுமாகவே யுத்தமாதிகாரியை நோக்கியது சொருபமாத்திர மாகையால், அதையனுபவிக்கவியலாதபோது மேற்கண்டபடியதவாம் எனக்கொண்டு விரோதபரிகாரம் செய்யவேண் டும். மேல் சர்வவேதாந்த சாரத்தையும் சேர்த்துரை செய்கின்றார். அதிகம் என்பதால் எது பலவசனங்களால் பல விடம் சொல்லப்பட்டது. அது ஆத்துமசொருபமான பிரம்மமேயன்றி வேறில்லை. எ—று அக

[illegible]

பொ—ள். ஸத்யமும், ஞானமும், அனந்தமும் ஆனந்தமும் எனவேதத்திலஎப்பிரமம, கேழ்க்கப்பட்டது அது உள்ளத்தில் பிரத்யகாத்ம ரூபமாத்திரயாய்விளங்குகின்தறதை ஓதுவிஜ அறிந்திடு. எ—து

வி—ரை. ஸத்யமும் ஞானமும் அனந்தமும எப்பிரமம் 'ஆனந்தம் பிரம்மமென்றறிந்தான்' என்ற சுருதிகளில் கூறப்பட்ட விலக்ஷணமமைந்த வஸ்துவே, தகராகாசத்துள்ளது- அங்குஷ்ட அளவையுள்ளவன் புருடன்,ஒன்றும் மனிதர் இதயத்துள்ளான், மனிதர்காள்! பிரத்யக்கு சர்வதோமுகன் உள்ளான் என்பதாதி வேதங்களால் என்றறியவேண்டும் என்றார். இதனுல் தகரத்தில் வழிபடவேண்டிய சிதாகாச மூர்த்தியும் பிரத்யகாத்மரூபனே என்றேற்பட்டது- 'இரண்டு பக்ஷிகள்' என்று தொடங்கிய சுருதி உபாதிபேதத்தாலமைந்த வேற்றுமையே அனுவதிக்கின்றதெனக் கொள்ளவேண்டும். அங்ஙனமே இப்ராணம் அவ்வேதார்த்தத்தைக் குறித்தலால் என்பதாதி மற்றோரிடம் விரியும்.

இனி அதை யறிவதிற் பயனைக் கூறுகின்றார்,

பொ—ள். இதயத்துள்ள மோகம் சிதறும் ஸம்சயங்கள் எல்லாம் ஒழியும், அந்த பரமான்மாவைக் கண்டவுடன் இவன் கன்மங்களெல்லாம் தொலையும். எ—து

வி—ரை. இது வேதத்தில் உள்ள வாக்கியமே, இறுதியில் மட்டில் 'பராவரன்' என்ற சொல்லுக்குப் பதிலாக பரமான்மாவென்ற சொல்லமைக்கப்பட்டது. இஃது முண்டகோபநிடதம் 2- வது அத்தியாயத்தில் எட்டாவது வசனம். இதன் பொருள் —'அந்த' அனேக வேதாந்தங்களில் எடுத்து விளக்கப்பெற்ற பரமான்மாவை ப்ரம்மரூபமதை அல்லது பரமனும் ஆன்மாவுமாய் நின்றதை அதாவது ஹிருதயாகாசத்தில் ஜீவனுமந்தர்யாமியாயும் உள்ளதை என்றும் பொருட்படுத்தலாம். இதுவே யுசிதம்- வேதத்தில் கண்ட 'பராபரச் சொல்லுக்கு இது வியக்கியானமாதலால் என்க. மூலத்தில் அவரன் என்றபதத்திற்குப் பதிலாக ஈண்டு ஆன்மா என்ற பதம் அமைக்கப்பட்டது * 'அந்த பராவரன்' என்றது தோற்றமாத்திரையாய நின்றதுவித பிரபஞ்சத்திக்கு அதிட்டானமாய் நின்ற பொருளைக் குறித்தது. 'அதைக்கண்டவுடன்' என்றது அதிட்டானத்தை யறிந்தவுடன் இதயத்துள்ள கிரந்தி சிதறும். இதயத்தில் ஐந்து சித்திரம் முதலிய லக்ஷணம் நிறைந்த சிவந்த மாம்ஸ பிண்டாகாரமான இதயகமலத்தில் உள்ள கிரந்தி ஜீவபரங்களை வேறுபடுத்தும் மாயையவித்தை யெனப்படுமுபாதிகள் சிதறும் தொலையும். ஆதலாற்றான் பந்தாவஸ்தையில் ஜீவபரபேதத்தை 'இரண்டு பக்ஷிகள்' என்று சுருதிகளால் அனுவதித்த முக்தியில் 'ஒரே விருட்சத்திற் புருடனுள்ளான், அசுவதந்திரனாய் துயரமடைந்தான்' என்று அடுத்திருக்குமீசனைக்காண்பான், அன்றவன் பெருமையடையப் பெறுவான்' என்றுப்ரம்மீபாவம் சொல்லப்பட்டது. அங்ஙனமின்றி இதன் கிரந்தி யென்பது ஐயமாதிமானஸஸங்

ஹ்ருதயக்ரந்திஶ்சித்யந்தே ஸர்வஸம்ஶயா: க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே [illegible]

[illegible]

கற்டம் எனப்பிறகொள்ளும் பொருள் ஒவ்வாது. அங்ஙனமாயின் 'எலலாசம்சயங்களும் ஒழியும என்றது கூறியது கூற்ரும். இதுவே இதன் பொருள். ஏனெனில், இதற்கடுத்த மூன் மந்திரத்தில் 'எவன் சர்வஞ்ஞன் சர்வவித்துஎவன்மகிமை புவியிலுள்ளது திவ்யப்ரம்ம புரமான ஆகாயத்தில் இவ்வான்மா நிகழ்வான் மனோமயன் பிராணசரீரநேதா அன்னத்திலிதயத்தைத் தழுவியிருப்பான் அவனையறிவால் தீரர் காண்பார் ஆனந்தரூபனும் அமுதனுமாய் விளங்குவான் என்று ஆன்மசொருபதரிசன சொல்லப்பட்டது. இதன் பொருட்டுணிபு—சர்வஞ்ஞத்தவவாதி குணங்கள் ஏற்றப்பெற்ற மாயாசபளப் பிரம்மம் திவ்விய ப்ரம்மபுரமெனப்படும் இருதயத்திட புகுந்துள்ளது ,அன்னமய சரீரத்திலும் மனோமய ஜீவரூபமாய் இதயத்திலும் உள்ளதுவே அந்தக்கரண வ்ருத்தி பெற்றது. அவ்விரண்டிலும் உள்ள காரண காரியவுபாதிகள் ஒழியவேஆனந்தாமிர்த சுப்பிரகாசவடிவமாகப் பெரியோர் அதை ஒன்றாகக் காண்பார்' என்பது, இவ்விதம் பூர்வமந்திரத்தில சொலலப்பட்ட தரிசனததின் பயனே இதுவென மந்திரம கூறியது.—ஆன்ம தரிசன சமகாலமான உபாதிக்ஷயம் ஆன்மதெர்சன காரியமென்றுபசரிக்கப்படுகிறது. ஆதலாற்றான் தைத்திரீய உபநிடதமும் 'யாது இந்த இதயத்துள்ளவாகாயம் அதிலுள்ளான் புருடன் மனோமயன்' என்றது. இனி இத்தரிசனத்தாலஉபாதி ஒழிவதால்மட்டில் உண்டாம் பயன் யாதெனக் கூறுகின்ரூர் 'சம்சயங்கள்' என்பதாதி வாக்கியத்தால் 'சம்சயங்கள் எல்லாம்' என்றது உலகம சத்தா அசத்தா ஆன்மபேதாபேதனு அல்லவா என்பதாதிகளெல்லாவற்றையும் சேர்ததேயுள்ளது- இதனுல் ஜடஜீவேசுவரப் பொருள்களில உதிக்கும சம்சயங்களெல்லாம் சேர்ந்தால் அது உலகரூபங்கள் ஆகும். விகற்பங்களெல்லாமற்றிடவே சொரூபம் பிரகாசிக்குமாகையால் அவை தொலையுமாறங்கேற்றது. மேற்கண்ட சம்சயம் ஒழிவதுமட்டில் புருடார்த்தமோவெனில், அன்று 'இவன் கன்மங்களை' என்பதாதி வாக்கியத்தால் வாஸனுக்ஷயம் பரமபலமாகக்காட்டுகின்ரூர். இவ்வித்துவானுடையகனமங்கள்= சஞ்சியாதிகள்மீண்டும்பிறப்பிறப்புக்களுக்கு ஹேதுவான கன்மங்களெல்லாம் இங்கு 'கன்மங்கள்'என்று எடுக்கப்பட்டன. தொலைகின்றன=தத்துவமறியப்படவேயெல்லாப்பசமும் தொலையும். தேவனை யறிந்தவன் எல்லாப் பாசங்களையும் ஒழிப்பான் என்பதாதி வேதவாக்கியங்கள் இதனைப் பொருட்படுத்தப்பட்டன- இது நிற்க இங்கு கன்மங்கள் என்ற சொல்லுக்குப் பிராரத்தமும் பொருளானல் 'அதுவே போகத்தாற்றான் நசிக்கும்' என்ற சித்தாந்தம் சிதையும் விதரன், தர்மவியாதாதிகளோருக்கு ஜன்மாந்தர ஞானமேயுள்ளது. எனவும் பிரார்த்தசேடமே இச்சன்மம் எனவும் ஆசாரியர்கள் கண்ட சித்தாந்தமும் அவலமாம். மேலும் பிராரத்தமும் ப்ரம்மஞானத்தால் ஒழிந்திடுமேல் ஞானவான்களுக்குப புனர் ஜன்மம் கூடாது; மேலும் தர்மபக்ஷி புகன்

[illegible]

———

...வாயசங்களின் ஜன்மங்களுக்குத்தான் தான் கதியென்ன என்பதாதி பல கேள்விகள் தோன்றுவதால் அதில் சித்தாந்தம் கூறுவாம். தேவனை யறிந்தவன் எல்லாப் பாசங்களையு மொழிப்பான் என்றவிடம் எல்லாம் என்னும் சொல்லாலும் இவன் கன்மங்கள் என்ற சுருதியாலும் கன்மங்கள் என்ற * பன்மையாலும் முக்தியென்றதில் ஆனந்தக் குறைவு சிறிதும் கூடாது பற்றியும், பிராரத்தமும ஞானத்தால் நசிக்கும் என்றே ஒப்பவேண்டும் ஆதலாற்றான் எங்ஙனம் வளர்ந்த நெருப்பு (ஈரம் உலர்ந்தது என்ற வேற்றுமையிராத) கட்டைகளைக் கொளுத்தும் (அங்ஙனம்) ஞானாக்னி சர்வகன்மங்களையும் சாம்பலாக்கும் ஓ அர்ஜுனா' என்று கீதையில் உள்ளது. இங்கு 'சர்வம்' என்ற விசேஷணம் அவ்வவ் வர்த்தமானங்களில் உள்ள அநேககன்மங்களைப்பற்றிய வேற்றுமை கொண்டு ,கன்மங்களை, என்றவிடத்துப் பன்மையைப்பயன்படுத்தும் சித்தாந்தத்தைத் தடுக்கவே கொடுக்கப்பட்டது. இங்ஙனமாயின் முற்கூறிப்போந்த விதுரதர்மவியாதாதி சரித்திரப் பொருத்தம் எங்ஙனமெனில், அறியாது கூறினாய் கேட்பாயாக. இவர் அபரோக்ஷ சாக்ஷாத்காரம் பெற்றவரல்ல. மேற்கண்ட சர்வகர்மக்ஷயம் அபரோட்சானுபூதிமான்களுக்கே யன்றிவேறில்லை- அவர்க்கே மீக்ஷியில்லாப் பெருவாழ்வும் குறைவில்லா ஆனந்தமும் இனி முற்காட்டிய விதுராதியர் எப்படியர் எனில் அவர் முற்பிறப்பில் சமாதி சாதன மனையப்பெற்றுச் சற்குருநாதனை யடைந்து கேட்டல் சிந்தித்தல் இரு பகுதி பூர்ணமான காலம் ஜன்மம் இடைநேர்ந்தவர்கள். அவ்வளவுமட்டிலுள்ள வுபசாரஞானத்துக்குப் பிரார்த்த நாசம் செய்யு மாற்றலின்மையால் வேறு ஜன்மமடைய நேர்ந்தது. முற்பவத்திற்றனே கேட்டலும் சிந்தித்தலும் ஒழிந்தமையால் இப்பவத்தில் தெளிதல் கூட நிஷ்டைபெற்று முக்திபெற்றனர். அற்றேல சுசிகளும் ஸ்ரீமான்களுமான பெரியோர் கிருகத்தில் யோகப்ரஷ்டர் பிறப்பார், 'அல்லது யோகிகள் குலத்திற்றனே பிறப்பார் ஓ பாரதாகேள்' ! என்பதாதி வசனங்களுக்குக் கதியென்ன ஜடபாரதர் மானுகப்பிறந்தது அவலமாகாதோவெனின் அற்றன்று. அது யோகத்தில் தவறியவர்கதி. இது ஞானமார்க்கத்தில் தவறியவர் கதியெனப்பாகுபாடறிந்து விஷயவிபாகம் செய்யதாலென்க- இனி யோகம் ஞானசாதகமாயினும் அதுவே ஞானமாவதில்லை மேற்கண்ட வசனங்களும் 'எங்ஙனம் வளர்ந்த அக்கினி' என்பதாதி வசனங்களும் கீதாசாஸ்திரத்திற்றனே காணப்படுதலால் ஒன்றுடன் ஒன்று முரணுவழி மேற்கண்டபடி பொருள் உரைப்பதே பொருந்தும் என்க- ஆகவே அபரோட்சசாட்சாத்காரம பிறந்தவர்க்கு எவ்வித பிராரத்தங்களும் மனவிட்சேபத்திற் கேதுவ காதெனக் காட்டப்பட்டது. இது கீற்க வேறுசிலர்கூறுமசித்தாந்தமாவது:—'பிராரத்தம் போகத்தற்றான் நசிக்கும். இங்ஙனமாயின் ஞானாக்னி எல்லாக்கன்மங்களையும் நசிப்பிக்கும்' என்றது எங்ஙனமொவ்வுமெனில், யோகபலத்தால் எவ்வளவு பிராரத்தபலன்களை அனுபவிக்கவேண்டுமோ அதுவரை அதே சரீரத்தை வைத்துக்கொண்டு, வரும் பவங்களில் அனுபவிக்கவேண்டியவைகளையும் அனுபவித்து, பிராரத்தத்

[illegible]

னைச் துலைத்துப் பிறகே விதேகமடைவான் என்பது அதன் கருத்து. அங்ஙனமே சௌபரி நாராயணி-ருதிபுண்டர் முதலிய யோகிகள் கதைகள் ஒவ்வுகின்றன. என்றனர் அஃது கூடாது- எல்லாக்கன்மங்களையும் நாம்பலாக்கும், என்பதாதி கீதா விரோதத்தால் என்க. மேலும் கேட்டலாதிகளால் கர்த்திருத்துவம் போக்திருத்துவம் முதலிய அத்தியாசங்கள் துலைந்திட்டவிடத்தில் பலத்தையனுபவிக்க வேண்டி ஆதாரப் பொருளின்மையால் அது கூடாததேயாம் என்க. பினனும் எச்சரீரத்தில் மனிதனுக்கபரோட்சம் பிறக்கும், அது சுத்த புண்ணிய சரீரம் எனப்படவேண்டும். அதிற்றானே அனேக பிராரத்தபலானுபவம் உளதாமாயின் இதை எவனும் விரும்பானன்றோ ஆதலால் தீவ்ரதரவைராக்ய பாக்யம் பெறுதவர்க்கே பிராரத்த பலபோகத்தை எதிர்பார்த்த சாத்தாபரோட்சம் பிறக்கும்- லிங்கசரீரபங்கமனோ விலயங்களுடன் கூடிய திவ்விய சுருபசம்விதபிவ்வியக்தி க்ஷணத்தில் அகண்ட பரிபூரண சச்சிதானந்தனுப் சேஷிக்கும் பரமுத்தனிடம் பிராரத்தம் உண்டென்பது பிரசண்ட சூரியமண்டலத்தில் ஓர் மூலையில் அகண்ட இருள் உண்டெனச் சாதிப்பதுபோல் எவ்வாற்றானும் மியையாதென்க இங்ஙனம் முதலில் அறியவிரும்பத்தக்கது ப்ரம்மமே என்றுபதேசித்து அதனிலக்கணமும் இஃதெனதுணிந்தோதப்பட்டது இவ்விலக்ஷணமும் சொரூபம், தடஸ்தம் என இருபகுபாடுகளுடன் சொல்லப்பட்டது. அப்பொருளையறிவதற்களவைகள் வேதாந்தங்களே எனவும் குறிக்கப்பட்டன. மேல் சர்வவேதாந்தவாக்கியங்களும் ப்ரமத்தினிடமே சமன்வயமடையும் வழியை முதலில் உபதேசிக்கத் தவக்கி ஸ்பஷ்டமாய் ப்ரம்மப்பிரதிபாதக வசனங்களை முதலில் சமன்வயம் செய்யும்வழி ஒருமந்திரத்தை முண்டக உபநிடதத்தில் எடுத்து அதைக்கொண்டு அவ்வுபநிடத்தை முற்றிலும் ஈசனிடம் சமன்வயம் செய்து முடித்தார். இதனால் மந்திரார்த்த ஞானமாத்திரமே பிரயோஜனமல்ல; மற்று அதையறிவதால் உண்டாகும் பயனுமீதெனக்குறிக்கப்பட்டது. (௧௧)

மேற்கண்ட முண்டகவுபநிடதம் அதர்வண வேதாந்த மாகையால் அதன்கருத்து ஈசனிடமமைந்த வழிகாட்டிதலவகாரசாமவேத வுபநிடதமாயகேனவுபநிடத்ததையும் பரமேசுவரனிடம் ஸமன்வயம் செய்கின்றார்.

இ—ள். வாக்கால எது எடுத்துவிரிக்கப்படாதது? இதனால் வாக்குப்பொருளையுணர்த்தும்? அதைப்ரம்மமென நீயறி. அது வாக்குக்கு விஷயமும் அல்ல. வாக்குமல்ல. எ—று.

இதுமுதல் ஆறுசுலோகங்கள் கேனவுபநிடதத்தின் பொருளை விரிப்பன. வாக்கால் எது எடுத்துவிரிக்கப்படாது என்றது, எதனிடம் வாக்கும் மனமும்செல்லாது என்பதாதி வேதங்களையும் தன்வயப்படுத்தியது, 'எதனால் வாக்குப்பொருளையுணர்த்தும்' என்றதற்கு, எந்தசர்வப்பிரகாசக பரமான்மஜோதியால் எதுவும் பிரகாசிக்கும், அதனால் வாக்கிந்திரியமும் பிரகாசிக்கின்றது என்றதுபொருள். வாக்குக்குப்பிரகாசம் என்பது மற்றவர்மனத்தில்பொருள்களை நன்

[illegible]

(அ—கை.) சங்கீர்ணம் சங்கரம் என்பது வேறு ஜாதியர்களென்பதைக்காட்டுகின்றார். மாஹிஷ்யனென்பவனால்கரண்யையினிடத்தில்உண்டுபண்ணப்பட்டபுத்திரன்ரதகாரனெனப்பெயர்பெறுகிறான். இதில் பிரதிலோமர்களை அசத் என்றும் அனுலோமர்களை சத்தென்றும் அறியவேண்டும். (95)

(வி—ரை.) க்ஷத்திரியனால் வைசியஸ்திரீயினிடம் உண்டுபண்ணப்பட்டவன் மாஹிஷ்யன் வைசியனால் சூத்திரஸ்திரீயினிடமிருந்துஜனித்தவள் கரணீ,இவ்விருவர்களுடையயோகத்தால் ரதகாரனென்ற புத்திரன் ஜனிக்கிறான். இவனுக்கு உபநயனம் முதலிய சமஸ்தக்கிரியைகளும் உண்டு. அவ்விதம் வசனமிருப்பதாலென்க. அப்படியேசங்கர். க்ஷத்திரியன். வைசியன்,இவர்களாலுண்டுபண்ணப்பட்டவர்களிடமிருந்து ஜனிப்பவன் ரதகாரனெனப்படுகிறான். இவனுக்கு இஜ்யை. தானம், உபனயநம், முதலிய சம்ஸ்காரமும் அசுவப்பிரதிஷ்டை, ரதசூத்திரம், வாஸ்துவித்யாத்யயனம், முதலிய விருத்திகளு முண்டு என்றார். இவ்விதமே, பிராமணன், க்ஷத்திரியன் முதலியவர்களாலுண்டுபண்ணப்பட்ட மூர்த்தாவஸிக்தன், மாஹிஷ்யன் முதலிய ஸங்கரஜாதிமர்களுக்கும் உபனயநம் முதலியதுண்டெனவறியவேண்டியது. அவர்கட்கும் த்விஜத்வம் என்பதிருப்பதாலென்க. இந்த ஸம்ஞைகள்வேறுஸ்மிருதிகளிற் கூறியிருப்பதாலங்கு நன்குகண்டறிக. இங்கு உதாரணமட்டிலும் காட்டப்பட்டது. ஏனெனில் சங்கீர்ணசங்கரஜாதிகள் அனந்தமாதலாலும அதைச் சொல்லிமுடியாததாலுமென்க. பிரதிலோமர்கள் அஸத்துக்களென்றும், அனுலோமர்கள் ஸத்துக்களென்றும் வியவரிக்கப்படுகிறார்கள். (95)

(அ—கை.) ஸவர்ணர்களான புமான்களுக்கு ஸவர்ணர்களானஸ்திரிகளிடம் ஸவர்ணர்களான் புத்திரர்களுண்டாகிறார்கள் என்று வருணத்தின் காரணத்தைவரைந்தார். இப்போது காரணாந்தரம் கூறுகின்றார்.

ஜாதியேன்மையானது ஏழாவது ஜன்மத்திலாவது ஐந்தாவது ஜன்மத்திலாவதுண்டாகிறது. அவரவர்களுடையகன்மங்கள் மாறுபட்டால் அக்கனமுள்ளவர்கள் போல்உண்டாகிறார்கள் முன்போல் தலைகீழாய் உண்டாகின்றது. 96

(வி—ரை,) ஜாதியாவது மூர்த்தாவஸிக்தன் முதலிய ஜாதி.அச்சாதிக்கு மேன்மையாவது பிராமணன் முதலிய ஜாதியை அடைவதே.அம்மேன்மையானது ஏழாவதினது ஜன்மத்திலாவது ஐந்தாவதிலாவது ஆறிலாவது வரும். அவ்விதம் வியவஸ்தை இருப்பதால். வியவஸ்தையாவது ஓர் பிராம்மணனால் சூத்திர ஸ்திரீயினிடமிருந்து நிஷாத ஜாதிப் பெண் உண்டாகிறாள், அவ

[illegible]

ளும் ஓர்பிராமணனையே விவாகித்துக்கொண்டு அவளும் ஓர்பெண்ணை உண்டு பண்ணுகிறாள். அவளும் பிராமணனால் விவாகிக்கப்பட்டு மற்றொருவளை உண்டுபண்ணுகிறாள். என்ற இக்கிரமப்படி அவளவள் பிராமணனையே விவாகித்துப்பெற்றுவரும் போது ஆறுவது தலைமுறையில் இருக்கிற ஸ்திரீயும் பிராமணனையே அடைந்து புத்திரனை உண்டுபண்ணினால் அப்புத்திரன் பிராமணனாகிறான் பிராமணன் வைசியஸ்திரீயினிடமிருந்து உண்டு பண்ணும் புத்திரி அம்பஷ்டையாகிறாள். அவளும் இதேபிரகாரம் வரும்போது ஐந்தாவதுவள் ஆறுவது பிராமணனைப் பெறுகிறாள். மூர்த்தாவஸிக்தையும் இதே பிரகாரம் நான்கு தலைமுறைக்குப்பிறகு ஐந்தாவது பிராமணனையே உண்டுபண்ணுகிறாள். இவ்விதம் உக்கிரையும் மாஹிஷ்யையும க்ஷத்திரியனால் விவாகிக்கப்பட்டு வரும்போது உக்கிரை ஆறுவதில் க்ஷத்திரியனையும் மாஹிஷ்யை ஐந்தாவதில் க்ஷத்திரியனையும் உண்டுபண்ணுகிறாள். அவ்விதமே காணியும் வைசியனால் விவாகிக்கப்படும் போது ஐந்தாவதில் வைசியனை உண்டுபண்ணுகிறாள் இவ்விதமே மற்றும் கண்டு கொள்க. இன்னும் கன்மங்கள் மாறு பட்டால் அதாவது தன் ஜாதிக்குரியதர்மத்தை ச்செய்யாது வேறு தர்மத்தை அடைவதே. பிராமணன் தனக்கேற்பட்டுள்ள கர்மப்படி ஜீவியாது க்ஷத்திரியதர்மத்தால் ஜீவிப்பது. அதனாலும் ஜீவியாது வைசியாவிருத்தில் ஜீவிப்பது அதனாலு மில்லாது சூத்திர விருத்தியால். க்ஷத்திரியனும் தன் பிழைப்புக் கொடுக்கக்கூடிய விருத்தியால் ஜீவியாது வைசிய விருத்தியாலாவது சூத்திர விருத்தியாலாவது ஜீவிப்பது. வைசியனும் தனதுவிருத்திப்படி ஜீவியாது சூத்திரவிருத்தியால் ஜீவிப்பது என்பது கன்மங்களுடைய மாறுதல். இவ்விதம் மாறுதலேற்படும்போது பிறகு தனக்குக்கஷ்டம் விடிந்தபிறகும் அவ்விருத்தியை விடாதிருப்பானேயாகில், அப்போது ஏழு ஆறு ஐந்து இந்த ஜன்மங்களில் சமானமாகிறான். அதாவது எந்த ஹீனஜாதியின் விருத்தியால் ஜீவிக்கிறானோ அச்சாதியை அடைகிறான் என்பது கருத்து. எவ்விதமெனில் பிராமணன் சூத்திர விருத்தியால் ஜீவித்துக் கொண்டு அதை விடாமலே புத்திரர்களை உண்டுபண்ணி அவனையும் அதே விருத்தியிலேற்படுத்தி இவ்விதம்சந்ததியாகும்போது ஆறுவது சந்ததியிலுள்ள அப்புத்திரன் தான் உண்டுபண்ணும் புத்திரனை சூத்திரனாகவே உண்டுபண்ணுகிறான். அதே பிராமணன் வைசிய விருத்தியால் ஜீவித்து வந்தால் ஆறுவது தலைமுறை வைசியன்தான். க்ஷத்திரிய விருத்தியால் ஜீவித்தால் ஐந்தாவதுவன் க்ஷத்திரியனே. க்ஷத்திரியனும் சூத்திரவிருத்தியால் ஜீவித்து வரும்போது ஆறுவது சூத்திரனையே உண்டுபண்

[illegible]

னுகிறான். வைசிய விருத்தியால் ஐந்தாவதில் வைசியனையே உண்டுபண்ணுகிறான். வைசியனும் சூத்திர விருத்தியை விடாமல் அதிலேயே இருந்தால் அவனது ஐந்தாவது ஜன்மத்தில் சூத்திரனுண்டாகிறான். முன்போல் தலைகீழாய் உண்டாகிறதென்பதின் அர்த்தம் இதற்குமுன் வர்ண சங்கரத்தில் அனுலோமமர்களிவர்களென்றும், பிரதிலோமர்களிவர்களென்றும் காட்டப்பட்டது. சங்கீர்ண சங்கிரஜாதியர்களும் ரதகாரன் உதாரணமாகக் காட்டப்பட்டது. இப்பேது வர்ணசங்கீர்ண சங்கரஜாதிகளைக் கூறுகின்றனர். தலைகீழாய்=கீழுமேலுமாயும் அதெவ்விதமெனில் எப்படி மூர்த்தாவஸிக்தை யென்னும் ஸ்திரீயினிடத்தில் க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களால் புத்திரன் உண்டுபண்ணப் படுகிறானே அதுபோல் அம்பஷ்டையினிடத்தில் வைசிய சூத்திரர்களாலும் நிஷாதியினிடம் சூத்திரனாலும் உண்டுபண்ணப்பட்டவர்கள் தாழ்ந்தவர்கள். இவர்கள் பிரதிலோமர்கள்- அப்படியே மூர்த்தாவசிக்தை, அம்பஷ்டை, நிஷாதி இவர்களிடங்களில் பிராமணனால் உண்டுபண்ணப்பட்டவர்களும் மாஹிஷ்யையினிடத்திலும் உக்கிரையினிடத்திலும் பிராமணனாலும் க்ஷத்திரியனாலும் உண்டுபண்ணப்பட்டவர்களும் 'கரணீ' என்னும் ஸ்திரீயினிடத்தில் பிராமணனாலும், க்ஷத்திரியனாலும், வைசியனாலும் உண்டுபண்ணப்பட்டவர்களும் மேலானவர்கள். இவர்கள் அனுலோமர்களெனப்படுவார்கள்: இவ்விதம் மற்று இடத்திலும் அறிந்துகொள்க. இந்தமேலென்பதும் கீழென்பதும் முன்போல் ஸத், அசத் 96
என்பதையும் அடையுமென்றறிக. வர்ணஜாதி விவேகப் பிரகரணம்

கிருஹஸ்தப் பிரகரணம்-

(அ—கை.) இனி ஸ்ரௌத ஸ்மார்த்தம் எனப்படும் கன்மங்கள் அக்னியில் முடிக்கக் கூடியவை. ஆகவே எந்த அக்கினியில் எது செய்யவேண்டுமென வாசங்கை நிகழ அதைக் கூறுகின்றார்.

கிருஹஸ்தனானவன் ஸ்மார்த்த கன்மாவை விவாகாக்னியிலாவது, தாயாதர்களின் பிரிவுக் கப்புறம் ஏற்பட்ட அக்கினியிலாவது செய்யவேண்டும். ஸ்ரௌத கன்மாவை
யாகாக்னியிற் செய்யவேண்டும். 97

வி—ரை. ஸ்மிருதியிற் கூறப்பட்டுள்ள வைசுவதேவம் முதலிய கன்மாவையும், மற்று லௌகிகமான பாகலட்சணம் முதலிய கன்மாவையும் விவாக காலத்தில் ஸம்ஸ்கரிக்கப்பட்ட அக்னி

[illegible]

[illegible]

லாவது, தாயாதர்களது விபாக காலத்திற்குப்பிறகு ஸ்வீகரிக்கப்பட்ட அக்னியிலாவது, அதாவது நல்ல குலத்தினின்றும் அக்னியைக் கொண்டுவந்து என்ற சம்ஸ்கரிக்கப்பட்ட அக்னியில் என்றர்த்தம். அபிசப்தத்தினர்த்தமாவது கிருஹத்திற்கு யஜமானனாயிருந்தவன் இறந்துபோய் அதன்பிறகு கிரகித்த அக்னியிலாவதென்பதர்த்தம். ஆகவே மூன்றுகாலந் தாண்டிவிட்டால் அப்போது பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்று விதிக்கப்படுகிறது. அக்னி ஹோத்திரம் முதலிய கன்மா சுருதியிற் கூறப்படுகிறது. அக்கன்மாவை ஆஹவநீயம் முதலிய யாகாக்னியிற் செய்யவேண்டியது. 97

அ—கை. இனி கிருஹஸ்தனது தர்மங்களைக் கூறுகின்றார்.

த்விஜன் சரீரசம்பந்தமான சிந்தையை முடித்துக்கொண்டு விதிப்படி சௌசம் முதலானதைச் செய்து பிறகு பல் துலக்கிவிட்டு விடியற்கால சந்தியாவந்தன கன்மத்தை முடிக்கவேண்டும். 98

(வி—ரை.) சரீர சம்பந்தமான சிந்தை=மலஜலம் விடுவதை முடித்துக்கொண்டு 'பகலில் காதில் பூணூலேமாட்டி' என்பதாதி முற்கூறிய பிரகாரம் முடித்துக்கொண்டு 'நாற்றமும் மலப்பூச்சுப்போகும்வரை' என்பதாதி முற்கூறிய பிரகாரம் சௌசம்முதலான கன்மாக்களைச் செய்து பிறகு தந்ததாவனம் செய்துகொண்டு விடியற்கால சந்தியை முடிக்கவேண்டும். தந்ததாவன விதியாவது—முள்ளுள்ள விருட்சத்திலிருந்தாவது, பாலுள்ள விருட்சத்திலிருந்தாவது பனிரெண்டு அங்குல நீளமுள்ளதாயும் கட்டைவிரல் நுனிபோல் பெருமனுள்ளதாயும் கணுக்களுடன் கூடியதாயும் எடுக்கப்பட்ட குச்சியால் பல்துலக்கி நாவையும் பரிசுத்தி செய்யவேண்டும். இங்கு விருட்சத்தினின்றும் எடுக்கப்பட்டதென்று கூறியதால் திருணத்தாலும் ஓடு முதலியதாலும் விரலாலும் பல்துலக்கக்கூடா'தென்ற நிஷேதம் ஏற்பட்டது. பலாசமரம், அரசு முதலிய விருக்ஷங்களுடைய குச்சியை உபயோகிக்கக்கூடாதென்ற நிஷேதத்தை வேறு ஸ்மிருதிமூலமாய்க் கண்டறிக. பல்துலக்குவதற்கு மந்திரம்—"ஓ வனஸ்பதியே! எங்களுக்கு நீண்ட ஆயுளையும் பலத்தையும், யசஸையும், காந்தியையும், பிரஜைகளையும், பசுக்களையும், தனங்களையும், பிரமஞானத்தையும், விசேஷ புத்தியையும் கொடுக்கவேண்டுமென்று. இச்சந்தியாவந்தன கன்மாவானது பிரமசரியப்பிரகரணத்திலேயே நன்கு விளக்கப்பட்டனவாயினும்இங்கு மறுபடியும் கூறி

வேதார்தாநதிகச்சேச்ச ஶாஸ்த்ராணி விவிதாநி ச ॥ ௯௯ ॥ உபேயாதீஶ்வரஞ்சைவ
யோகக்ஷேமார்தஸித்தயே । ஸ்நாத்வா தேவாந் பித்ரூம்ஶ்சைவ தர்பயேதர்சயேத்ததா
॥ ௱ ॥ [illegible]

[illegible] ॥ ௯௮ ॥

ஹுத்வேதி [illegible] 'உது த்யஞ்ஜாதவேதஸம்' [illegible] ॥ ௯௯ ॥

உபேயாதிதி [illegible]

யது, பல்துலக்கிய பிறகுதான் செய்யவேண்டுமென்பதைக் காட்டுவதற்காகவே தவிற வேறல்ல. அப்பிரகாணத்திலேயே இதையுமியம் பலாகாதோவெனிற் கூடாதுதான். ஏனெனில்— "பல்துலக்குவதையும், நாட்டியம், கானம் முதலியதையும் பிர்மசாரிஸேவிக்கக்கூடா"தென்றுவிஷேதமேற்பட்டிருப்பதாலென்க. (98)

ஹோமம்செய்து சூரியனை தைவமாயுள்ளமந்திரங்களை ஏகாக்கிரசித்தனயிருந்து ஜபித்துப்பிறகு வேதாந்தங்களையும், நாநாசாஸ்திரங்களையும் தெரிந்து கொள்ளவேண்டியது. (99)

(வி—ரை.) விடியற்கால சந்தியாவந்தனத்திற்குப்பிறகு. ஆஹவனீயாதி அக்னியையாவது, அல்லது ஔபாஸனக்னியையாவது சாஸ்திரப்பிரகாரம் ஸேவித்து அதன் பிறகு சூரியனை தைவமாயுள்ள 'உது த்யஞ்ஜாதவேதஸம்' என்பதாதி மந்திரங்களை ஏகாக்கிரசித்தனயிருந்து ஜபித்து அதன்பிறகு திருக்தம் வியாகரணம் முதலியவேதார்த்தங்களையும் அறியவேண்டும். வேதார்த்தங்களையும் என்றதால் அத்தியயனம் செய்ததையும் மறக்காமல் அப்பியசிக்கவேண்டுமென்று கருத்து. நாநாசாஸ்திரங்கள்=மீமாம்ஸைமுதலியதுகளான தர்மம் அர்த்தம் ஆரோக்கியம் இதுகளையும் அறியவேண்டும். (99)

தனக்குயோகம் க்ஷேமம் சித்திப்பதற்காக ஈசுவரனை அடையவேண்டும். பிறகு ஸ்நாநம்செய்துதேவர்கட்கும் பிதுர்க்களுக்கும் தர்ப்பணம் செய்து பிறகு பூஜைமுதலியது செய்யவேண்டும் (100)

(வி—ரை.) அதன் பிறகு அபிஷேகம் முதலிய குணங்களுடன் கூடிய ஈவரனையாவது அல்லது யோகக்ஷேமத்திற்காகஸத்தாயுள்ள ஸ்ரீமானன புமானையாவது அடையவேண்டும். யோகக்ஷேமமாவது—கிடைக்காமலிருந்தது கிடைப்பது யோகம். கிடைத்திருப்பதைப்பரிபாலிப்பது க்ஷேமம். இங்கு அடையவேண்டுமென்று சொன்னதால் ஸேவையை நிஷேதித்தாயிற்று. ஸேவையாவது- சம்பளம் வாங்கிக் கொண்டு ஒருவனது ஆக்ஞைக்குள்பட்டிருப்பது தான். அது நாய்க்குசமானமென நிஷேதித்திருப்பதாலென்க. பிறகு மத்தியான்னத்தில் தன் சாகையிற்கூறியிருக்கிற வாருணதிமுதலியதில் ஸ்நாநம் செய்து தேவர்களையும தனது கிருஹ்யத்திற்கூறியிருக்கிறபடி பிதிருக்களையும். பிதிருக்களையும் என்று சொன்னதால் ரிஷிகளையும் கிரகித்துக்கொ

[illegible] ௯௯

[illegible] ௧00

[illegible] ௧0௧

[illegible]

ள்ளவேண்டுமென்று சொன்னதாயிற்று. இவர்களுக்குத்தர்ப்பணம் செய்யவேண்டும் அதன் பிறகு, கந்தம், புஷ்பம், அக்ஷதை முதலியதால் விஷ்ணு, சிவன், பிர்மாமுதலியதேவதைகளுக்கு வேதோக்தமானவாஹனம் ஆஸனம் முதலியதேற்படுத்தி அந்தந்ததேவதைகளது பெயரை நான்காம வேற்றுமையுடனும் இறுதியில் நம: என்ற சப்தத்தையும் கூட்டி சாஸ்திரப்பிரகாரம ஆராதிக்கவேண்டியது. (100)

இதிஹாஸங்களுடன் கூடியவேதம் அதர்வம், புராணம் முதலியதையும் அத்தியாத்ம வித்யையையும், யக்ஞஸித்திப்பதற்காக ஜபிக்கவேண்டும். (101)

(வி—ரை.) அதன்பிறகுவேதம் அதர்வம், புராணம, இதிஹாஸம், அத்யாத்மம்முதலியசமஸ்தத்தையுமாவது அல்லது சிலவற்றையாவது யக்ஞம் ஸித்திப்பதற்காக சாஸ்திரப்படிதன் சக்திக்குத்தக்கபடி ஜபிக்கவேண்டியது. பிறகு பூதயக்ஞமாகிய பலிகர்மாவென்ன, பிதிருயக்ஞமான ஸ்வதை என்ன, தேவயக்ஞமானஹோமமென்ன, பிர்மயக்ஞமானஸ்வாத்தியாயமென்ன, மனுஷ்யயக்ஞமான அதிதிபூஜையென்ன ஆகிய இப்பஞ்சமகாயக்ஞங்களும் நித்தியமானபடியால் பிரதிதினமும் செய்யவேணடும். இப்பஞ்சமகாயக்ஞங்களுக்குப்பலன் கூடியிருப்பதால் இது காம்யமாய் ஏற்படுகிறபடியால் எவ்விதம் நித்தியமாகுமெனின்—இதற்குப்பலம் கூறியது காம்யமென்பதைக்காட்டவந்ததல்ல. மற்று இது மகாபரிசுத்தமான கர்மம் என்பதைமட்டிலும் சொல்லவந்ததெனக் கொள்க. (101)

தேவர்களுக்குஹோமம் செய்து மீறும் அன்னத்தில் பூதபலிகொடுக்கவேண்டும். நாய், சண்டாளன், காக்கை முதலியதற்காகப்பூமியிலும் அன்னத்தைப்போடவேண்டும் 102)

(வி—ரை.) தன் கிருஹ்யத்திற் கூறியிருக்கிறவாறுவைசுவதேவஹோமத்தைச் செய்து அதில்மிஞ்சும் அன்னத்தைக் கொண்டு பூதபலி இடவேண்டும். இங்கு அன்னமென்று சொன்னது பக்குவம் இல்லாததைபபோடக் கூடாதென்று நிஷேதிப்பதற்காக. அதன் பிறகுதன் சக்திக்குத்தக்கவாறு நாய், சண்டாளன், காக்கை முதலியவற்றிற்கும் பூமியிலும் அன்னத்தைப்போடவேண்டும். இங்கு முதலிய வற்றிற்கும் என்று கூறியதால் புழுப்பூச்சிகள், கெட்டரோகமுடையவர்கள் பதிதர்கள் இவர்களுக்கும் போடவேண்டுமென்றர்த்தம். அப்படியேமனுவும்— நாய்கட்கும், பதிதர்கட்கும், சண்டாளர்கட்கும், கெட்டரோகமுடையோர்கட்கும் கா

[illegible] [௧௦௨]

[illegible] [௧௦௩]

[illegible]

௧௦௨॥

க்கைகட்கும்- பூச்சிபுழுக்களுக்குமாக பலியை மெள்ள பூமியிற் போடவேண்டு மென்றார். இவ்விதம் இரவும்பகலும் செய்பவேண்டும். அங்ஙனமே- இரவும்பகலும் ஏற்பட்டஹவிஷ்பத்தாலென்று ஆசுவலாயனரும் கூறியபடியாலென்க. இங்கு சிலர் “பகலிலும் இரவிலும் சமைக்கப்பட்ட அன்னத்தைஹோமம் செய்வேண்டு’ மென்று கூறியதால் இவ்வைசுவதேவமெனும் கர்மாவனது அன்னசம்ஸ்காரத்திற்காக ஏற்பட்டதென்றும் ‘இனிப்பஞ்சமகாயக்ஞத்தைக் கூறுவாம் என்றாம் பிக்கு இவைகளே பஞ்சமகாயக்ஞங்களென்றுகூறி இப்பஞ்சமகாயக்ஞங்களைப் பிரதிதினமும் செய்பவேண்டும்’ என்று நித்யத்துவம்கூறினமையால் புருஷார்த்தத்திற்குமேற்படுகிறது என்று இரண்டிற்கும் இக்கன்மா உபயோகம் என்கிறார்கள். அதுயுக்தமன்று புருஷார்த்தத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் போது ஸம்ஸ்காரத்திற்கும் என்று சொல்வது சரிவராது. ஏனெனில்— அன்னம் முதலிய திரவியசம்ஸ்காரத்திற்கெனும் பக்ஷம் ஏற்றுக்கொள்ளும்போது வைசுவதேவகன்மாவானது அன்னத்திற்காகவென்றும், புருஷார்த்தமெனும் பக்ஷத்தைஏற்றுக்கொள்ளும்போது திரவியத்திற்காகவைசுவதேவகன்மாவெனவும் ஒன்றற்கொன்று விரோதம் வருதலாலென்க. ஆதலால் புருஷார்த்தமென்று சொல்வது தான்யுக்தம். மகாயக்ஞங்களாலும் யக்ஞங்களாலும் இச்சரீரம் பிரமார்ப்பணம் செய்யப்படுகிறதென்றுவிதி இருத்தலாலும். அப்படியே— வைசுவதேவம் முடிந்ததும் வேறு யாராவது அதிதிவந்தால் அவனுக்குத்தனது சக்திக்குத்தக்கபடி அன்னம் கொடுக்கவேண்டுமேயொழிய பலியைப் பிருக்தக்கூடாது. என்றுவிதியிருப்பதாலும் என்க. புருஷார்த்தமங்கீகரிக்கும்போது வைசுவதேவ கன்மாவைப்பிரதிபாதகமாய் எண்ணக்கூடாது “ஆனபடியால் சாயங்காலமும் விடியற்காலமும்” மெனஉத்பத்தியும் பிரயோகமும், அத்தகைய இப்பஞ்சமகாயக்ஞங்களைப்பிரதிதினம் செய்யவேண்டியதென்று அதிகாரவிதியும் காட்டப்பட்டதென்று முற்றிலும் சரியே, (102)

பிரதிதினமும் பிதிருக்களுக்கும் மனுஷ்யர்களுக்கும் அன்னம் கொடுக்க வேண்டும். அதில்லாவிடில் ஜலமாவது தரவேண்டும். பிரதிதினம் தனது சாகாத்தியயனத்தையும் செய்பவேண்டும். தனக்கென்று சமையல் செய்யக்கூடாது. (103)

...भोज्यातिथिभृत्यांश्च दम्पत्योः शेषभोजनम् ॥१०४॥ आपोशानेनोपरिष्टादधस्तादश्नता तथा । अनग्नममृतं चैव कार्यमन्नं द्विजन्मना ॥ ॥१०५॥ अतिथित्वेन वर्णानां देयं शक्त्यानुपूर्वशः । अप्रणोद्योऽतिथिः सायमपि वाग्भूतृणोदकैः ॥१०६॥ सत्कृत्य भिक्षवे भिक्षा...

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

(வி—ரை,) பிரதிதினமும் தனது சக்திக்குத்தகுந்தபடி பிதுருக்களுக்கும் மனுஷ்யர்களுக்கும் அன்னம் கொடுக்கவேண்டும். அன்னமில்லாவிடில் கிழங்கு முதலியவைகளாவது, அதுவுமில்லாவிடில் ஜலமாவது கொடுக்கவேண்டும். பிரதிதினமும் தனது சாகையை மறவாதிருக்கும்பொருட்டு அத்தியயனம் செய்யவேண்டும். தனக்கென்று சமையல் செய்யவே கூடாது. அன்னமென்றுரைத்தது ஸகலர்களும் சாப்பிடக்கூடியதென்பதைத்தெருவிப்பதற்காக. தனக்காக அன்னம் சமையல் செய்யக்கூடாதென்றால், தேவதோத்தேசமாகவே செய்யவேண்டுமென்பது கருத்து. (103)

பாலர்கள், விவாகம் செய்து பிதரு கிருஹத்திலிருக்கும் ஸ்திரீ வயது முதிர்ந்தவர் கர்ப்பிணி, ஆதுரர், கன்னிகை, அதிதி, சேவகன் முதலியவர்களை முதலில் போஜனம் செய்யச் சொல்லி மீத்ததை தம்பதிகள் புசிக்கவேண்டும். (104)

(வி—ரை) இதனர்த்தம் தெரிந்ததே.

புசிக்கும் த்விஜனானவன் ஆபோசனம் என்னும் கர்மாவால் முதலிலும் இறுதியிலும் அன்னத்தை அக்கினியாகவும் அமிர்தமாகவும் செய்யவேண்டும். (105)

(வி—ரை) இங்கு த்விஜன் என்று சொன்னதால் உபனயனம் முதல் சர்வாசிரமஸ்தர்களும் செய்யவேண்டுமென்பதைக் காட்டுவதற்காக. (105)

அதிதிகளாய் வந்த வருணர்களுக்குக் கிரமப்படி கொடுக்கவேண்டும். சாயங்காலம் அதிதி வந்தபோதிலும் அவனைப் போகச் சொல்லாது வாக்காலாவது பூமியாலாவது, திருணத்தாலாவது, ஜலத்தாலாவது சத்காரம் செய்யவேண்டும். (106)

(வி—ரை) வைசுவதேவத்திற்குப் பிறகு அதிதிகளாய்ப் பிராமண க்ஷத்திரியன் முதலிய நான்கு ஜாதியோரும் ஏககாலத்தில் வந்துவிட்டால் அப்போது பிராமணன் முதலிய கிரமப்படிச் செய்யவேண்டும். சாயங்காலத்திலும் அதிதி வந்தால் அப்போது அவனை வீணாய்ப்போகச் சொல்லாது தனது கிருஹத்தில் சாப்பிடத் தருவதற்குத் தக்க வஸ்து யாதொன்றுமில்

[illegible] पारिजाते विष्णुधर्मोत्तरे शालग्रामशिलां वापि चक्राङ्कितशिलां तथा । ब्राह्मणः पूजयेन्नित्यं क्षत्रियादिर्न पूजयेदिति तत्स्पर्शपूजापरम् । अदीक्षितपरमित्यन्ये । विस्तरस्त्वस्मत्पितृकृतपूर्तकमलाकरे निर्णयसिन्धौ च ज्ञेयः । पार्थिवलिङ्गपूजायामप्यधिकारः । मृद्भस्मगोशकृत्पिष्टताम्रकांस्यमयेन वा । कृत्वा लिङ्गं सकृत्पूज्य वसेत्कल्पायुतं दिवीति भविष्योक्तेः । वैदिकमन्त्राभावाच्च । तदुक्तं तत्रैव स्कान्दे, आहरणसंघट्टप्रतिष्ठावाहने [illegible] स्नापनं पूजनं चैव विसर्जनं तथा क्रमात् ॥ हरो महेश्वरश्चैव शूलपाणिः पिनाकधृक् । पशुपतिः शिवश्चैव महादेव इति क्रमात् । भविष्ये । शर्वाय क्षितिमूर्तये नमः, भवाय जलमूर्तये नमः, रुद्राय अग्निमूर्तये नमः, उग्राय वायुमूर्तये नमः भीमाय आकाशमूर्तये नमः । पशुपतये यजमानमूर्तये नमः । महादेवाय सोममूर्तये नमः । ईशानाय सूर्यमूर्तये नमः । मूर्तयोऽष्टौ हव्येशान्ताः पूर्वादिकाः क्रमात् (क) रुद्रयामले पूर्वाद्या [illegible]

...த்தை விட்டு வழுவாதிருந்து விஷ்ணு ஆராதனம் செய்யலாம். அங்ஙனமல்லாதவன் கூடாது என்றது: சாளக்கிராம சிலையிலாவது, சக்கிரம்போல் அடையாளமுள்ள சிலையிலாவது பிராமணன் பூஜை செய்யலாமே தவிர க்ஷத்திரியன் முதலாயினோர் கூடாது என்று பாரிஜாதத்தில் விஷ்ணுதர்மோத்தரத்தில்கூறியவிடத்தில் க்ஷத்திரியன்முதலானவர்தொட்டுப்பூஜிக்கலாகாதென்று மட்டிலும் நிஷேதித்ததெனக் கொள்ளவேண்டும். சிலர் தாந்திரிக தீட்சை பெறாதவனைக்குறித்ததென்கிறார்கள். இதன் விரிவை எம்மாலுரைக்கப்பட்ட பூர்த்த கமலாகரத்திலும் நிர்ணய ஸிந்துவிலும் கண்டறிக. இதுபோல் பார்த்திவ லிங்க பூஜையிலும் அதிகாரம் உண்டு. மண்ணாலும், பஸ்மாவாலும், ஆவின் சாணத்தாலும், மாவினாலும், தாமிரத்தாலும், காம்ஸிபத்தாலும் லிங்கம் செய்து ஒரு தடவை பூஜை செய்தபோதிலும் அவன் அநேக கல்பகாலம் சுவர்க்கத்தில் வசிக்கின்றான் என்று நிதித்துவத்தில் பவிஷ்யத்திற் கூறியதாலென்க. அதில் வைதிக மந்திரமில்லாததாலும் அங்ஙனம் அனுஷ்டிக்கலாமென்றதெனக் கொள்க. அதுவும் அவ்விடத்தே ஸ்காந்தத்தில்— மண்ணைக் கொண்டுவருவதற்கும், சேர்ப்பதற்கும், பிரதிஷ்டை செய்வதற்கும், தேவதையை ஆஹ்வானம் செய்வதற்கும், ஸ்தாபிப்பதற்கும், பூஜிப்பதற்கும், விஸர்ஜனம் செய்வதற்கும் மந்திரமாகக் கிரமமாய் ‘हराय नमः’ महेश्वराय नमः, शूलपाणये नमः. पिनाकधृते नमः- पशुपतये नमः- शिवाय नमः- महादेवाय नमः॥’ என்றே சொல்லப்பட்டுளது. பவிஷ்யத்திலும்:— “शर्वाय क्षितिमूर्तये नमः भवाय जलमूर्तये नमः, रुद्राय अग्निमूर्तये नमः, उग्राय वायुमूर्तये नमः, भीमाय आकाशमूर्तये नमः, पशुपतये यजमानमूर्तये नमः, महादेवाय सोममूर्तये नमः, ईशानाय सूर्यमूर्तये नमः” என ஈசுவரனுக்குஎட்டு மூர்த்திகளேற்பட்டுளது. முன் சொன்னதில் ‘रुद्राय अग्निमूर्तये नमः’ என்றாரம்பித்துக் கடைசிவரை சொல்லிய பின் முன் இரண்டையும் சொல்லி வேதிகையில் லிங்கத்தில் சிவனைப் பிரதிஷ்டை செய்து பூஜிக்க வேண்டும். இங்குபூர்வத்தில ‘हव्येशान्ताः पूर्वादिकाः’ என்றவிடத்து पूर्वादि சப்தத்திக்

[क] रुद्रयामलवचनात् [illegible]

(1) ஆக்னேய திக்கை— அதாவது தென் கிழக்கு மூலையை முடிவில வைத்து, என்றதினால் அது தொடங்கிக் கீழ் திக்கில் முடிப்பதென்பது ஏற்படுகிறது. அதற்குப் பிரமாணம் ருத்திரயாமளத்திலுள்ளதை மேலே காட்டப் போகின்றார்.

[illegible]

—— *) (* ——

[illegible]

——(⁐)*(⁐)——

[illegible]

——(0)——

கைத்தான் குறிக்கின்றது. ஏனெனில் 'சிவனது முன்னிலையிலென்று' ருத்திர யாமளத்தில விதே தித்திருப்பதால். ஆகையால் இங்கு பிரசித்தமான கிழக்கு திக்கைத்தான் குறிக்கின்றது. (அதாவது கிழக்குத்திக்கிலிருந்துதான் பூஜை செய்ய ஆரம்பிக்கவேண்டு மென்பது கருத்து.) இவ்வண்ணமே நவராத்திரியில் தேவீ பூஜை முதலானதுகளிலும் செய்ய வேண்டும். ஆகையால் விந்திய பர்வதத்தில் வசிக்கிறவர்களுக்கு "நவராத்திர் என்பதால்" என்றும்பித்து வைசியர்களாலும், பக்தியுள்ள சூத்திரர்களாலும், மிலேச்சர்களாலும், மற்ற மனிதர்களாலும்என்று மேற்படி ஹேமாத்திரி பவிஷ்யத் புராணத்தில் சொல்லி யிருப்பதால். இம்மாதிரி மிலேச்சர்களும் எல்லாத் திருடர்களும் மந்திரமில்லாமற் பூஜிக்கிறார்கள். ஆனால் தாமச பலத்தைக் கொடுக்கும் இது கிராதர்களுக்கும் சம்மதம் என்று நாராயணீய பவிஷ்யத்தில்சொலலி யிருப்பதாலும் என்க.

—— 0 ——

சூத்திரர்களது விரதோபவாச விசாரம்.

——)(——

அப்படியே சூத்திரர்களுக்கும் விரதோபவாஸம் முதலானதுகளில் அதிகாரமுண்டு. ஏனெனில் அவர்கள் வித்தையைக் காதால் கேட்கலாம், மந்திரத்தைக் காதால் கூட கேட்கக்கூடாது. கீழ் திசையார்கள். வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்கும் இரண்டு இராத்திரிஉபவாஸ நிஷேத மிருக்கிறது- ஆகையால் வைசிய சூத்திரர்களுள் யாரேனும் அக்ஞானத்தினால உபவாசம் செய்வார்களே யானல் அவர்களுக்கு ஐந்து இராத்திரி அல்லது மூன்று இராத்திரி சுத்திகிடையாது என்று ஹேமாத்திரியில் பவிஷ்யத்தில் சொல்லி யிருப்பதால் என்று சொல்லுகிறார்கள். உண்மையில் ஆரம்பத்தினால் இந்தநிஷேதம் பெரிய தபஸ்ஸைக் குறித்தது. குருசிரேஷ்ட! நவராத்திரியில் ஒன்பது நாளும் உபவாசமிருக்கவேண்டுமென்றுசொல்லி; பிராமணர்களாலும், க்ஷத்திரியர்களாலும், வைசியர்களாலும், சூத்திரர்களாலும், மற்றவர்களாலும், ஸ்திரீகளாலும் அதைச்செய்யும்படி விதித்து 'இதைக்கேள்'என்று பவிஷ்யத்தில் சூத்திரர்களுக்கும் விதித்திருப்பதால்என்க.

——

𑌅𑌥 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑍍𑌰𑌮𑌃

[illegible] (1) [illegible] (2) [illegible]

சூத்திரனுக்குப் பிராயச்சித்தக் கிரமம்.

இவ்விதமே சூத்திரனுக்குப் பிராயச்சித்தத்தை ஜபமும் ஹோமமு மில்லாமற் செய்து வைக்கவேண்டும். ஆனபடியால் தர்ம மார்க்கத்தினின்று வழுவாயலிருக்கும் சூத்திரனுக்கு ஜபமும் ஹோமமும் இல்லாமல் பிராயச்சித்தம் செய்யவேண்டும் எனமிதாக்ஷரியில் அங்கிரஸ் கூறியிருப்பதாலெனக. இங்கு சூத்திரனுக்கு ஜபம ஹோமம இவை இல்லாமல் பிராயச்சித்தம் செய்து வைக்கவேண்டுமென்ற விடத்தில் சூத்திரனுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டுமானல் ஜப ஹோமம் இல்லாமல்தான் செய்துவைக்க வேண்டுமென்றர்த்தமா? அல்லது ஜப ஹோமம் இல்லாமல் விதிக்கப்படும் பிராயச்சித்தம் சூத்திரனுக்குத் தான் என்றர்த்தமாவெனில், இரண்டாவது சொன்னதன்று; 'ஏனெனில் காய்ச்சின பாலில் தயிரை ஊற்றி உண்டுபண்ணப்படுவது ஆமிட்சி யெனப்படும் என்ற விடத்துக் கடினமான திரவிய மொன்றும் ஜலத்திரவியம் ஒன்றும் ஆக இரண்டும் உண்டாகின்றது. அவ்விரண்டும் ஒரே கன்மாவில் உபயோகிக்கப்படுகின்றதோவெனநேரும்போது கடினமான ஆமிட்சி வைசுவதேவத்தில் என்றும், மற்றது மற்றொன்றிலுமென்று வாக்கிய பேதம் ஒப்புக்கொள்ள நேரிடுவதுபோல் இங்கும் இரண்டாவது பட்சத்தை ஏற்றுக்கொண்டால் த்விஜர்கள் விஷயத்தில் வாக்கியபேதம் ஒப்புக் கொள்ள நேரிடும். மற்றுசூத்திரனுக்கு விதிக்கப்படும் பிராயச்சித்தம் ஜப ஹோமம் இவை இல்லாமல்தான் செய்ய

(க) [illegible]

[உ] [illegible]

(1) அங்கிரஸ் என்பவர் மூலஸ்மிருதி செய்தவராதலால் அவர் வாக்கியம் சிறந்த பிரமாணமே. ஜபமும், ஹோமமும் முக்கியமாயுள்ளதே நிஷேதிக்கப்பட்டது. மேலே இக்கிரந்த கர்த்தாவானவர் பிரதானமாகிய ஜபஹோம நிஷேதங்களை மறுப்பாராயினும் அவ்வித மறுப்புத் தக்கமூலயுக்தி இல்லாததால் உபேக்ஷிக்கத் தக்கது. அந்தயுக்தி குற்றமுள்ள தென்பதை மேலேகுறிப்பாம்.

(2) ஜபம் ஹோமம் இவைகளில்லாத பிராயச்சித்தத்தை சூத்திரனுக்குச் செய்யவேண்டுமென விதிப்பதிவ்விதியல்ல. மற்று சூத்திரனுக்குப் பிராயச்சித்தம் செய்யும்பொழுது அதற்கு அங்கமான ஜபஹோமங்களையே மறுப்பதிது.

[illegible: Sanskrit passage in Grantha script, 5 lines]

வேண்டு மென்பதே சரியானது. இங்கு சிலர் பிரதான பூதமான ஜப ஹோமம் இவைகட்குத்தான் நிஷேதமே தவிர அங்க பூதமான ஹோமதத்திற்கு நிஷேதமில்லை. ஆனது பற்றித்தான் மகார்ணவ மென்னும் கிரந்தத்திலும் லௌகிகாக்கினியில் ஸ்திரீ சூத்திரர்கட்குப் பிராமணன்மூலமாய் ஹோமம் செய்து வைக்கலாமென்கிறார்கள். அது பிசகு. எல்லாக் கிருச்சிரங்களது ஆரம்பத்திலும் இறுதியிலும் ஆஜ்பத்தாலேயே கிருஹ்பாக்னியில் ஹோமம் வியாஹிருதியை வெவ்வேறாகச் சொல்லிச் செய்யவேண்டும். சிராத்தம் முதலியதும் விரதங்களும் செ

---

(௧) [illegible: Sanskrit note in Grantha script, 2 lines]

(௨) [illegible: Sanskrit note in Grantha script, 7 lines]

---

(1) வியாகிருதிகளென்பன வைதிக மந்திரங்களாதலால் அவைகளை உச்சரிப்பதிலும் கேட்பதிலும் சூத்திரனுக் கதிகாரமில்லாமையால் அதை பிராமண முகத்தில் உச்சரித்து அதனால் முடிக்கவேண்டிய கன்மங்களை முடிப்பது நியாயமேயா மென்ப ததன் கருத்து.

(2) பெண்களுக்கு ஔபாசனக்கினியில் அதிகாரமானது, தம்பதிகளுக்கு அதில் அதிகாரத்தை விதித்த வசனத்தால் ஏற்பட்டமையால் அவர்கட்கு ஹோமம் நிஷேதிக்கப்பட்டது. உண்மையில்பிரதானமாகிய ஜப ஹோமங்களை இங்கு நிஷேதிக்கப்படுகின்றன வென்பது நியாயம். கிருச்சிரம் முதலிய கன்மங்களில் பிரதிநிதியாய் காயத்ரீ ஜபம் முதலிய ஜபமாவது ஹோமமேயாவது எங்கேனும் பிராயச்சித்தமாக விதிக்கப்பட்டால் அதனை சூத்திரர் விஷயத்தில் அன்ய முகத்தாலேயும் வினியோகிக்கக் கூடாதென்பதே அந்த நிஷேதத்தின் பொருள். அப்படிச் சொல்வதே ஜபம் ஹோமம் இரண்டுமில்லாத பிராயச்சித்தத்தைக் கொடுக்கவேண்டுமென்ற விதியின் பொருள். சூத்திரனுக்குப் பிராயச்சித்தம் செய்விக்கும் விஷயத்தில் முக்கியமாய் அவை ஜப ரூபமாயாவது ஹோம ரூபமாயாவ திருந்தால் அதை அவர் விஷயத்தில் செய்யக் கூடாதென்பது முடிந்த கருத்து. உதாரணம்:—ஒருபாபத்திற்கு மூன்று கிருச்சிரங்களைச் செய்வது பிராயச்சித்தம். ஒரு ரோகியான சூத்திரன் அதை விதிப்படி அனுஷ்டிக்கச் சக்தியற்றவன். அவனுக்கு அதற்குப் பிரதிநிதியாய்ச் சாத்தியமான ஒன்றை விதிக்கவேண்டும். ஸ்மி

[illegible]

